IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தருமபுரி மாவட்ட மக்களின் ஒப்பாரிப்பாடல்கள் வழி சடங்குகள்

நெறியாளர்

**முனைவர் ஏ. வீரப்பன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**இரா. தீர்த்தமலை**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
கௌரவ விரிவுரையாளர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அரூர்

**முன்னுரை**

நாட்டுப்புறப் பாடல்கள் இன்றோ நேற்றோ பிறந்தவையல்ல மனித இனம் தோன்றியபோதே தோன்றியவையாகும். மனித வாழ்வின் தவிர்க்க முடியாத கலை பண்பாட்டோடு தொடர்பு கொண்டவையாக விளங்குவது நாட்டுப்புறப்பாடலே. பூர்வக்குடி மக்களின் வாழ்வியலை வெளிக்காட்டும் பொக்கிஷமே நாட்டுப்புறப்பாடல்களாகும். எண்ணற்ற மக்களின் வாழ்வியலின் கலைக் களஞ்சியமாக இன்றளவும் இருப்பதை காணலாம். நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு நிலைத்த தன்மையினை கொண்டதாக இல்லாமல் காலத்திற்கு ஏற்றார் போல் மாற்றங்களை சந்திக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் மனித உணர்வுகளின் வெளிப்பாடாக பாடப்படுவதனால் அவரவர்களின் சூழ்நிலைக்க தக்கவாறு மனதின் எண்ணத்தின் போக்குகளின் அடிப்படையிலேயே தோன்றுகின்றது. நாட்டுப்புறப் பாடலை கொண்டு மனிதனுடைய வாழ்வியலை மிகத் தெளிவாக அறிந்திட முடியும். அந்த வகையில் நாட்டுப்புறப் பாடலில் ஒருபகுதியாக உள்ள ஒப்பாரிப் பாடலில் இறப்பின் வழியாக செய்யப்படும் சடங்குகளில் தருமபுரி மக்களின் சடங்குகள் பற்றி இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**நாட்டுப்புறப்பாடல்**

நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்பற மக்களால் பாடப்படுபவையாகும். நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் காடுகளிலும் வயல்வெளிகளிலும் பாடக்கூடியவையாகும். நாட்டுப்புறப் பாடலை நாட்டுப்பறப் பாடல், நாடோடிப் பாடல், நாட்டார் பாடல், வாய்மொழிப் பாடல், பாமரர் பாடல், கல்லாதார் பாடல், காற்றிலே மிதந்த கவிதை என்றெல்லாம் நாட்டுப்புறப் பாடலை அழைக்கின்றனர். “இயற்கை அன்னை தன்னை முகம் பார்க்கத் தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி நாட்டுப்புறப் பாடல்” என்று சு. சக்திவேல் கூறுகின்றார்.

நாட்டுப்புறப் பாடல் தாலாட்டில் தொடங்கி ஒப்பாரியில் முடிகிறது. மனித வாழ்வின் முன்னுரை தாலாட்டு என்றால் முடிவுரை ஒப்பாரியாகும். அந்த வகையில் நாட்டுப்புறப் பாடல்களில் மிக முக்கிய பங்காற்றக்கூடிய இடத்தில் ஒப்பாரி இருக்கின்றது.

**ஒப்பாரிப் பாடல்**

மனித வாழ்வு தாலாட்டில் தொடங்கி ஒப்பாரியில் முடிகின்றது. ஒப்பாரிப் பாடல் நாட்டுப்புறப் பாடலில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றது. ஒப்பாரிப் பாடல் மனித உறவுகளில் எவரேனும் தவறும் பட்சத்தில் அதாவது இறந்துவிடும்போது அவருக்காக பாடப்படும் பாடலே ஒப்பாரிப் பாடலாகும். இது தாயோ, தந்தையோ, கணவனோ, மனைவியோ, பிள்ளையோ அல்லது உடன் பிறந்த சகோதரியோ, சகோதரனோ மனித உறவு முறைகளில் யாராகயிருந்தாலும் இறந்த நபரின் வாழ்வியலை ஒப்பிட்டு இறக்கப்போகின்ற மக்கள் பாடும் பாட்டே ஒப்பாரிப் பாட்டாகும். ஒப்பாரிப் பாடலை சென்னை பல்கலைக்கழகத் தமிழ் அகராதி ஒப்ப + ஆரி என பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் என பொருள் தருகின்றது. தமிழில் ஒப்பாரியை பிலக்கணம் பிணக்கானம், கையறுநிலை, புலம்பல், இறங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு என பல்வேறு வகையாக வகைப்படுத்துகின்றது.

ஒப்பாரிப் பாடல் ஒப்புச் சொல்லி அழுவதையே குறிக்கிறது. மனித மனம் இறந்தவரை நினைத்து அழுவதையும், இறந்தவரையும், இறந்தவர் சார்ந்த நிகழ்வுகளையும் ஒப்புச்சொல்லி அழுவதையே ஒப்பாரி என்பர். ஒப்பாரிப் பாடலில் பெரும்பாலும் பெண்களே பாடுவதை காணலாம். ஒப்பாரிப் பாட்டென்பது மனித வாழ்வின் ஒரு சடங்காகவே மாறிவிட்டன. ஒரு சில இடங்களில் பறையடித்து ஒப்புச்சொல்லி அழுவதை காணலாம். ஆண்கள் பறையடித்துக் கொண்டு ஒப்பாரி பாடுகின்றார்கள். ஒப்பாரிப் பாட்டு இறந்தவருக்கு பாடுவதையே குறிக்கின்றது.

**நாட்டுப்புறப் பாடலில் சடங்கு**

நாட்டுப்புறப் பாடல்கள் மனித வாழ்வின் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளதைபோல நாட்டுப்புறப் பாடலில் சடங்கியல் சார்ந்த பாடல்கள் தவிர்க்கமுடியாதவையாக உள்ளது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வாழ்வின் விழாக்கலான காதணி விழா, பூப்பெய்திய விழா, மஞ்சள் நீராட்டு விழா, திருமண விழா, நழுங்கு, வளையல் போடும் விழா, தொழில்சார்ந்த விழாவான பொண்ணேறு கட்டுதல், உழவு பாடல்கள் போன்றவையெல்லாம் மனித பண்பாட்டோடு வாழ்வியலோடு தொடர்பு கொண்டவையாக உள்ளது.

தமிழிரின் வாழ்வியலில் சடங்குகுளின் அடிப்படையிலேயே பெரும்பாண்மையான நாட்டுப்புறப்பாடல்கள் இடம்பெறுகின்றன. மனிதன் வாழுகின்ற போதும் இறந்தபின்னும் சடங்குகள் மிக முக்கியம். சடங்கென்பது மனித உணர்வின் வெளிப்பாட்டை விட நம்பிக்கைகள் சார்ந்தவையாக இருக்கின்றது. சடங்கின் வழி பாடல்களை வெளிப்படுத்துவதையும் மனித மனத்தின் தேவையே இவை அனைத்தும் வெறும் சடங்குக்கு மட்டுமில்லாமல் சம்பிரதாயமாகவே வாழ்வதை கணிக்கலாம்.

**தருமபுரி மக்களின் ஒப்பாரிப்பாடல்களில் சடங்கு**

ஒப்பாரிப் பாடல்கள் ஒப்பச்சொல்லி அழுவதை குறிக்கின்றது. நாட்டுப்புறப் பாடலில் ஒப்பாரிப்பாட்டு மிக முக்கியமானதாக பங்காற்றுகின்றது. ஒப்பாரி பாடல்கள் இறந்த நபர்மீது பாடப்படும் பாடலே. இறந்தவரின் வாழ்வியலில் தொடர்புடைய அத்தனை சம்பவங்களையும் உள்ளடக்கி பாடக்கூடிய பாடல்களே ஒப்பாரி பாடல்களாகும். இறந்தவர் ஆணோ, பெண்ணோ, பெரியவரோ, சிறியவரோ என்று இல்லாமல் அவரவர்களின் வாழ்ந்த வாழ்வுக்கு தக்கவாறு வாழ்வியலை தொடர்புபடுத்தி பாடுகின்றனர். இது இடத்திற்கு இடம் வேறுபட்டிருப்பதை காணலாம். தமிழ் இலக்கியத்தில் திணை அடிப்படையில் பாடல்கள் அமைவதை போன்று ஒப்பாரியிலும் இடம் இறந்தவர் வாழ்ந்த சூழ்நிலைகளை கொண்டு வாழ்ந்த வாழ்வியலை ஒப்பிட்டு ஒப்பாரி வைப்பதை காண்கிறோம். நாட்டிற்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம் என்ற

நின்றுவிடாமல் மாவட்டத்திற்கு மாவட்டம் என்று வேறுபட்டிருப்பதை காணலாம். தருமபுரி மாவட்ட அளவில் ஒப்பாரி பாடல்கள் இடம், இனம், மொழி, வாழ்வியல் சூழல்கள், பழக்க வழக்கங்களின் அடிப்படையில் மாறுபட்டிருக்கின்றன. பல்வேறுபட்ட இனக்குழுக்களை கொண்ட மக்களின் வாழ்வியலோடு தொடர்பு கொண்டவை என்பதனால் இப்பகுதியில் மக்களின் சடங்கியல் சார்ந்த ஒப்பாரியின்வழி அறியப்படும் தரவுகளை பற்றியும் வாழ்வியலையும் காணலாம்.

**இறப்புச்சார்ந்த சடங்குகள்**

ஒப்பாரிப் பாடல்கள் அனைத்தும் இறப்பில் பாடக்கூடிய பாடல்கள். மனித வாழ்க்கையின் சோகத்தின் உச்சமே ஒப்பாரி. இறப்பு; சடங்குகள் அனைத்தும் ஒப்பாரியோடு தொடர்புடையவையே. இறந்த மக்களுக்கு சடங்குகள் செய்வது, பண்பாடு கலாச்சாரத்தோடு பின்னிப் பிணைந்தவைகள். சடங்குகள் அனைவருக்கும் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சடங்குகளில் வேறுபட்டிருக்கும். குழந்தைகள் இறந்தால் வேறு விதமான சடங்குகள் செய்கின்றார்கள். திருமணமாகாத ஆண், திருமணமாகாத பெண் இறந்தால் அவர்களுக்கான சடங்ககளை செய்கின்றார்கள். சடங்குகள் என்பது இறந்த வீட்டிலிருந்து வீட்டார் செய்யப்படுகிற சடங்குகள், தாய்மாமன் மற்றும் சம்பந்தி வீட்டார் செய்யும் சடங்குகள் என பிரிப்பார்கள்.

பெண் இறந்தால் தாய்வீட்டுக் கோடித்துணி கொண்டு சடங்கு செய்வார்கள். ஆண் இறந்தால் தாய் மாமன் வீட்டு கோடிக் கொண்டு சடங்குகளை செய்வார்கள். குழந்தை இறந்தால் பச்சைவைத்தல் என்று செய்கின்றார்கள். தாய்மாமன் முறைகளை கொண்டு செய்கின்றார்கள்.

திருமணமாகாத ஆணோ, பெண்ணோ இறந்தால் இறந்த நபரின் வீட்டின் முன் இறந்த உடலை வைத்து வாழைமரத்தை கட்டி அதோடு அரசன் இலை, அம்மிக்கல் மஞ்சள், குங்குமம், மணவரை போன்று அலங்கரித்து இறந்த நபர் ஆணாக இருந்தால் தந்தை வாழை மரத்திற்கு தாழிக்கட்டுகின்றார்கள். பெண் இறந்தால் தாயமாமன் தாழி கட்டுகின்றார்கள். இறுதியாக இறந்த உடலை எடுக்கும் முன் ஆண் இறந்தால் பெண்ணாக நினைத்து கட்டப்பட்ட வாழை மரத்தை தாய் மாமன் வெட்டி விட்டு பிறகு உடலை எடுப்பார்கள். பெண் இறந்தால் இது போன்ற சடங்குகள் செய்து விட்டு பின்பு இடுகாட்டிற்கு கொண்டு செல்லுகின்றார்கள். திருமண வயதை அடைந்த ஆண், பெண் இறந்தால் வாழை மரத்தை மணமகளாகவே அல்லது மணமகனாகவோ நினைத்து அழுதுபுலம்பி இச்சடங்கின் மூலமாக மண முடிக்கும் வழக்கம் இன்றுவரை தருமபுரி மக்களிடம் இருக்கின்றது.

**சீர் கொண்டுவருதல்**

இறந்தவருக்காக சம்பந்தி முறையுள்ளவர்கள் தாய் மாமன் போன்றோரார்கள் சீர் செய்வது இறப்பு சடங்கு முறைகளில் சீர் செய்முறை என்று செய்கின்றார்கள். இந்த சீர் செய்கிற முறைகளில் ஆண், பெண் என்று வேறுபாடு உண்டு. ஆண் இறந்தால் ஆணுக்கான வெள்ளை நிறக் கோடியும், பெண் இறந்தால் பெண்ணுக்கானதாக சிவப்பு நிறக்கோடியும் சீரில் இடம்பெறும். பிறந்த வீட்டார், தாய் மாமன், பெண் கொடுத்த தாய் தந்தையர், பெண் கொண்டவர், கொடுத்தவர்கள் செய்வார்கள். இந்த சீர் வரிசையில் இடம்பெறும் பொருட்கள், கற்பூரத்தை தவிர பூசைக்கு வைக்கின்ற அனைத்து பொருட்களும் இடம்பெறும். அரப்பு, சந்தனம், மஞ்கள், சிவப்பு, சோப்பு, பன்னீர், வாசனை திரவியங்கள், ஊது பத்தி, தேங்காய், வெற்றிலை பாக்கு, வாழைப்பழம், வேட்டி கோடி, சேலை (பெண் இறந்தால் மட்டும்) போன்றவை இடம்பெறும்.

தன் தகப்பன் இறந்ததனால் பிறந்த பெண்ணொருத்தி சீர் எடுத்துவரும்போது பாடும் பாடல்,

"பானையிலே தயிரெடுத்து பாங்கான மத் தெடுத்து
பாடி கடையும் போது சாவு மேளம் கேட்டதென்ன
யார் வீட்டு மோளமின்னு
ஆராஞ்சி நான் பார்த்தா
தன் வீட்டு மோளமின்னு ஊராலு வந்து சொல்ல
முந்தானி தரையவிட்டு தலை மயிரை விரிச்சி போட்டு
அப்படியே ஓடி வரேன் அப்பானும் கிடைக்கவில்லை
அண்ட கதியத்து நிலகொலஞ்சி நிக்கரனே
சிரிச்ச முகம் பார்க்க என்ன பெத்த சீராளன் கண்பார்க்க
சீர் கொண்டு வர்ரேனே சிரிச்ச முகம் காட்டு
என்ன பெத்த சீராளா சீர் கொளஞ்சி கிடக்கிறயே..............

எனப் பாடப்படுகிறது.

பிண்ட சோறு சடங்கு

இறந்தவர் ஆணோ, பெண்ணோ, சிறியவரோ, பெரியவரோ யாராக இருந்தாலும் பிண்ட சோறு, பொறி சோறு என்பது இறந்தவருக்கு செய்யக்கூடிய சடங்குகளில் இடம்பெறும். இந்த சடங்குக்கு பிண்டசோற்றினை செய்பவர்கள் கணவனை இழந்த பெண்கள் மட்டும் தான் செய்வார்கள். இந்த பிண்ட சோற்றினை இறந்த நபருக்கு நடுக்காட்டில் வைத்து செய்யப்படும் சடங்குக்கு தேவையானதாக கொண்டு செய்கின்றார்கள். இந்த சடங்கினை செய்பவர் கொல்லி வைப்பவர் தன் கையில் சவத்தின் நான்கு முனையிலும் வைத்து சடங்கு செய்வார்கள்.

ஒரு பெண் தனது கணவனை இழந்ததால் அப்பெண்ணுக்கு கிடைத்த விதவை என்ற பெயரையும் பிண்ட சோற்றிற்கு முதலும் மற்ற சடங்குக்கு ஒதுங்கி நிற்பதை நினைத்து பாடுகிறாள்.

"பிண்ட சோறு பொரிசோறு ஆக்கிதரும் முண்டச்சியா
முதல் ஆளு நானானேன்
முன்ன பாக்கும் கண்ணுஎல்லாம் முனுமுனுத்து போவங்க
இப்ப முன்ன பாக்கும் கண்ணெல்லாம் முனுமுனுக்கும்
சத்ததை கானம்
முண்டச்சி இவயின்னு முன்ன நிக்க ஆளானேன்
மணமுடிச்ச மன்னவனே நீ மண்ணுக்கு போயிட்டு
நீ என்னை இந்த நிலைக்கு நிறுத்திட்டியே.............."

**பிறந்த வீட்டில் விளக்கு ஏற்றுதல்**

திருமணமான பெண்களின் கணவன் இறந்துவிட்டால் பிறந்தவீட்டில் அந்த பெண் விளக்கேற்ற வேண்டும். கணவன் இறந்து அடக்கம் செய்த பின்னர் நடைபெறும் நிகழ்வு, சடங்குகள் எல்லாம் வெறும் சடங்காச்சரத்திற்கு செய்கிறோம் என்று இல்லாமல், சடங்கு சம்பிரதாயத்தின்படி இன்றளவும் தருமபுரி மாவட்ட மக்கள் செய்து வருகின்றார்கள். கணவனை இழந்த பெண் கைம்பெண் ஆகிறாள். அவளின் வாழ்க்கை பிறந்த விட்டாருக்கு பெரிதும் வருத்தும் விதமாக மாறிவிடுகிறது. அதனால் முதல் சடங்காக பிறந்த வீட்டிற்கு அழைத்து அவரை வைத்து விளக்கேற்றும் சடங்கு செய்கின்றார்கள்.

இச்சடங்கு கணவன் கணவன் இறந்த அடுத்தநாள் யார் முகத்திலும் படாமல் அதிகாலையில் பிறந்த வீட்டிற்கு சென்று குளித்து புது புடவை கட்டிக்கொண்டு விளக்கேற்றி விளக்கை கும்பிட்டு, பிறந்த வீட்டார் கொடுக்கும் பாலோ அல்லது தண்ணீரோ குடித்துவிட்டு முக்காடிட்டுக்கொண்டு பின் தன் கணவன் வீட்டிற்கு திரும்பிவிட வேண்டும். இச்சடங்கு அதிகாலையில் நடக்கும். இதனை அழுது புலம்பி இச்சடங்கினை செய்வார்கள். இன்றும் இவ்வழக்கம் இம்மாவட்ட மக்களிடம் இருந்து வருகிறது.

**பொட்டு, பூ, வளையல் களைதல்**

கணவன் இறந்தவுடன் மனைவி என்பவள் இந்த உலகில் பொட்டு, பூ, வளையல், மெட்டி, கொலுசு போன்றவைகள் அணிவதற்கு அனுமதியில்லை என்பதை தெரிவிக்கும் பொருட்டு அனைத்தையும் களைவதற்கென்று சடங்கு என்று சொல்லி செய்கின்றனர். இச்சடங்கினை கணவனை இழந்த பெண்ணின் நாத்தனார், ஒரகத்தி, மாமியார் போன்ற உறவுப் பெண்கள் பூவையும், பொட்டையும் களைந்து விடுகின்றனர். வளையல் அணிந்த இரண்டு கைகளையும் சேர்த்து ஒன்றையொன்று அடித்து உடைப்பதும் இப்பகுதியில் சடங்காக செய்து வருகின்றனர். கணவனை இழந்த பெண்ணும், நாத்தனார் ஒரகத்தியார், மாமியார் போன்றோர் சேர்ந்து பெண்கள் மட்டும் இந்த சடங்கினை செய்து முடிக்கின்றார்கள். இச்சடங்கு செய்கிறபோது சேர்ந்து ஒப்பாரி வைத்து அழுது கொண்டே சடங்கினை செய்வார்கள்.

பொட்டு, பூ, வளையல் களைதல் சடங்கு செய்வதற்கு நல்ல நேரம் பார்த்து செய்கின்றார்கள். கணவன் இறந்து 3, 5, 7, 13 என்று ஒற்றைப்படை நாளில் காரியம் கருமாதி செய்வார்கள். காரியம் செய்வதை ஒரு இனத்தார்குள்ள வேறுபாடு இருப்பதை பார்க்கலாம். 7-ஆம் நாள் காரியம் என்று ஒரு குழுவும், 13-ஆம் நாள் காரியம் என்று ஒரு குழுவும் ஒரு சாதிக்குள்ளே காரியம் செய்வதில் பிரிவு இருக்கின்றது. அந்த நாளில் பொட்டு, பூ, வளையல் களைக்கும் சடங்கு நடைபெறும். இச்சடங்கில் கணவனை இழந்த பெண் திருமணத்திற்கு சிங்காரிப்பதை போன்று பொட்டு கைநிறைய வளையல், தலைநிறைய பூ, மஞ்சள் பூசி சிங்காரித்து முக்காடிட்டு அமர்த்தி சடங்குகள் செய்து பின்பு வீட்டின் நடுவீட்டில் விளக்கேற்றி அழுது புலம்பி விதவை கோளம் பூணும் விதமாக பொட்டு, பூ, வளையல் போன்றவைகளை களைந்துவிடுவர். இச்சடங்கு செய்வதற்கு தேவையான அத்தனை பொருட்களையும் பிறந்த வீட்டார் வாங்கிக்கொடுப்பார்கள்.

**முடிவுரை**

சடங்குகள் மனித வாழ்வின் உயிர் நாடியாக இன்றளவும் இருக்கிறது. உலக அளவில் சடங்குகள் என்பது தவிர்க்கமுடியாதவையாக இருந்துவருகிறது. சடங்குகள் அனைத்தும் மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்ப வரையும் இறந்த பின்னும் நிகழ்வதை காணலாம். நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே சடங்குகள் பிறக்கின்றன. மதம், மொழி, இனம், சாதி என பல்வேறு இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கின்றது. மனிதனுக்கு சதையும் எலும்பும் ஒன்றாக இருப்பதுபோல மனித வாழ்வில் பிரிக்கமுடியாத ஒன்றே சடங்கு. சங்க கால மக்களும் தங்கள் வாழ்க்கையில் சுற்றியுள்ள இடம், திணை, பால் போன்றவற்றின் அடிப்படையாக கொண்டு

சடங்கியல் வாழ்க்கையை வாழ்ந்து வந்ததை காணமுடிவதை போல உலகில் எல்லாம் இடங்களிலும் சடங்கியல் சார்ந்த நடைமுறையில் இருக்கின்றது.

சடங்கு என்ற சொல் ஒரு பொதுவான சொல் என்றாலும் சடங்க செய்யப்படும் முறைகள் வேறுபட்டிருக்கின்றன. மனிதன் பிறப்பு, வளர்ப்பு, காது குத்துதல், மஞ்சள் நீராட்டு விழா, திருமணம், பக்தி, விவசாயம், இறுதியாக இறப்பு என்ற பல்வேறு சடங்குகள் நிகழ்கிறது. அத்தனை சடங்குகளும் இடத்திற்கு இடம், இனத்திற்கும், மதத்திற்கும் மதம், மொழிக்கு மொழி என்று மாற்றம் பெறுகின்றது. அந்த வகையில் தருமபுரி மாவட்ட மக்களின் இறப்பில் சடங்கருள் என்ற தலைப்பின் மூலமாக இம்மக்களின் சடங்குகள் சார்ந்த வாழ்க்கை இன்றளவும் குறையாமல் இருக்கின்றது. மதம், இனம், மொழி, சாதி என்று இருப்பதைபோல இம்மக்கள் மத்தியில் இன்றளவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதை அறியலாம்.

**துணைநூற்பட்டியல்:**

1. நாட்டுப்புற இயல் ஆய்வு, டாக்டர் சு. சக்திவேல், ப.எண். 29

2. தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வுானமாமலை, ப.எண். 422

3. நாட்டுப்புறவியல், பேரா. சு. சண்முகசுந்தரம்